

நல்வாழ்வை நோக்கி



# கிராமங்களுக்கு மின்சார வசதி

1322



ப்ளிகேஷன்ஸ் டிவிஷன்


நம் காலம் முடிந்தது!
மின்சாரம் வந்துவிட்டது

# கிராமங்களுக்கு மின்சார வசதி

இன்றைய உலகிலே மின்சாரம்தான் சுபிட்சத்திற்குத் திறவுகோல். ஒரு நாட்டில் எவ்வளவு மின்சாரம் உற்பத்தியாகிறது என்பதைக் கொண்டு அந்நாட்டின் செழிப்பு, வலிமை, முற்போக்கு ஆகியவற்றைச் சொல்லிவிட முடியும். மின்சாரம் இல்லாமல் நவீனத் தொழிற்சாலைகளையோ பண்ணைகளையோ நடத்த முடியாது. விளக்கு, மின்சார விசிறி, ரேடியோ, டெலிபோன், சினிமா முதலிய நவீன வசதிகளுக்கெல்லாம் மின்சார விசை அத்தியாவசியமானது. இவை போன்ற வசதிகளைப் பொறுத்தே ஒரு நாட்டின் முன்னேற்றம் மதிப்பிடப்படுகிறது.

இருபது ஆண்டுகளுக்கு முன் நாம் இவ் விஷயத்தில் பெரிதும் பின்தங்கியிருந்தோம். நமக்குத் தேவைப்பட்ட மின்சார சக்தியில் இருபதில் ஒரு பங்கைக்கூட அப்போது நம்மால் உற்பத்தி செய்ய முடியவில்லை. உற்பத்தியான மின்சாரமும் நகரவாசிகளுக்கு மாத்திரமே கிடைத்து வந்தது. மொத்த விசையில் சுமார் பாதியை நாலைந்து பெரு நகரங்களே உபயோகித்து வந்தன. நாட்டில் பெரும்பகுதிக்கு—அநேகமாக எல்லாக் கிராமங்களுக்கும், பெரும்பாலான டவுன்களுக்கும்—இந்த வசதி கிடைக்கவில்லை.

போதிய விசை கிடைக்காமையால் நம் நாட்டில் தொழில்கள் வளர முடியவில்லை. நவீன விவசாயத்துக்கு வேண்டிய இயந்திரங்களோ, அந்த இயந்திரங்களுக்கு வேண்டிய விசையோ கிடைக்கவில்லை. அதனால் நம் நிலங்கள் குறைவான விளைச்சலையே கொடுத்து வந்தன.

## ஐந்தாண்டுத் திட்டங்கள்

நாடு சுதந்திரம் பெற்ற பின் இந்தப் பிற்போக்கு நிலையை மாற்றுவதற்கு முற்பட்டோம். விசை உற்பத்தியை அதிகரிப்பதற்கு முதலில்

ஏற்பாடு செய்யாவிடில், தொழில்-விவசாயப் பண்டங்களின் உற்பத்தியைப் பெருக்க முடியாது. ஆகவே ஐந்தாண்டுத் திட்டங்களில் மின்சார உற்பத்திக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டது.

1951 முதல், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் காலத்தில் விசை உற்பத்தி வேலைக் கிரமங்களில் 1,700 கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு செய்தோம். அதனுல் மின்சார உற்பத்தி பெரிதும் அதிகரித்திருக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சியின் கடைசி ஐம்பது ஆண்டுகளில் மொத்தம் எவ்வளவு தயாரிக்கப்பட்டதோ, அவ்வளவு மின்சாரம் இப்போது ஒரே வருஷத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது. 1947-ல் நம் நாட்டில் 14 லட்சம் கிலோவாட் விசையை உற்பத்தி செய்ய வசதி இருந்தது. இப்போது 101 லட்சம் கிலோவாட்டாக இது பெருகியிருக்கிறது.

தண்ணீர், நிலக்கரி, கனிஜ எண்ணெய் ஆகிய வற்றின் உதவியால் மின்சாரம் தயாரிக்கலாம். இக்காலத்தில் அணுசக்தியிலிருந்தும் விசை உற்பத்தி செய்ய முடிகிறது. இந்தச் சாதனங்கள் எல்லாவற்றையும் நாம் பயன்படுத்தி வருகிறோம். நிலக்கரிக்கும் கனிஜ எண்ணெய்க்கும் சில வரையறைகள் உண்டு. அவை சில பகுதிகளில்தான் கிடைக்கின்றன ; அவற்றைத் தோண்டி எடுக்கவும், ஓரிடத்திலிருந்து இன்னெரு இடத்துக்குக் கொண்டு போவதற்கும் மிகுந்த பணம் தேவைப்படுகிறது. அணுசக்தியின் மூலப் பொருளான தோரியம் என்ற கனி உலகிலேயே மிக அதிகமாக காணப்படும் நாடு இந்தியாதான். மற்ருெரு அணுசக்தி மூலப் பொருளான யுரேனியம் கனியும நம் நாட்டின் சில பிரதேசங்களில் ஏராளமாகக் காணப்படுகிறது. ஆனுல் இவற்றிலிருந்து மின்சாரம் தயாரிப்பது சிக்கலான, செலவு மிகுந்த காரியம். இந்த முறை இன்னமும் ஆரம்ப கட்டத்திலேயே இருக்கிறது ; ஆனுல் காலப்போக்கில் இது நமக்குக் கணிசமான விசையைத் தரமுடியும்.

மற்ற எல்லாச் சாதனங்களையும்விடத் தண்ணிர் தான் மிக மலிவானது, மிகுதியாக இருப்பது,

தட்டுப்பாடின்றி எப்போதும் கிடைக்கக் கூடியது. நம் நாட்டு ஆறுகளின் உற்பத்தி ஸ்தானங்களாகிய இமயமலை, விந்தியமலை, மேற்குத் தொடர்ச்சி மலை, கிழக்குத் தொடர்ச்சி மலை ஆகியவற்றை ஒட்டியுள்ள பகுதிகளில் ஏராளமான மின்சாரம் உற்பத்தி செய்வதற்குத் தோது இருக்கிறது. நம்முடைய மிகப் பெரிய மின்சார உற்பத்தி நிலையங்கள் சில இப் பகுதிகளில் நிருமாணிக்கப்பட்டிருக்கின்றன.

### பல-நோக்கு அணைகள்

நீர்த் தேக்கத் திட்டங்கள் எல்லாம் விசை உற்பத்திக்காக மாத்திரம் ஏற்பட்டவை அல்ல. பாசன வசதி, வெள்ளத் தடுப்பு முதலிய காரியங்களுக்கும் அவை பயன்படுகின்றன.

பெரிய ஆறுகளின் குறுக்கே அணை கட்டி நீரைத் தேக்குகிறோம். இந்தத் தேக்கத்திலிருந்து தண்ணீரைக் கால்வாய்கள் மூலம் வயல்களுக்குக் கொண்டு போகிறோம். உயர்வான மதகுகளின் வழியாகத் தண்ணீரைத் திறந்துவிடும்போது அது மிகுந்த விசையுடன் கீழே விழுகிறது. மின்சார இயந்திரங்களின் சக்கரங்கள் மீது இந்த நீரை விழச் செய்தால், அவை சுழன்று விசையை உற்பத்தி செய்கின்றன.

அணைகளை நிருமாணிப்பதற்கு உயர்ந்த எஞ்ஜினீரிங் அறிவும், ஏராளமான கட்டிடச் சாமான்களும் தேவைப்படுகின்றன. இதற்கெல்லாம் ஏராளமான பணம் செலவாகிறது. உதாரணமாக, பஞ்சாப் ராஜ்யத்தின் பாக்ரா-நங்கல் திட்டத்தை எடுத்துக் கொள்வோம். அதைப் பூர்த்தி செய்வதற்குச் சுமார் இருபது ஆண்டுகள் பிடித்தன; ஏறக்குறைய 175 கோடி ரூபாய் செலவாயிற்று. இன்னும் முப்பது பெரிய அணைத் திட்டங்களை நிறைவேற்றியுள்ளோம்; அவை ஒவ்வொன்றுக்கும் 5 முதல் 50 கோடி ரூபாய் வரை செலவாயிற்று. மேலும் ஐம்பது அணைகள் நிருமாணிக்கப்பட்டு வருகின்றன. நாட்டின் எல்லாப் பிரதேசங்களிலும் ஒவ்வொரு பெரிய அணையாவது இருக்கும் விதத்தில் இத் திட்டங்கள்


பரவலாக நிறைவேற்றப்பட்டுள்ளன. உதாரணமாக பாக்ரா-நங்கல் அணைகளிலிருந்து பஞ்சாப், டில்லி, ராஜஸ்தான் பிரதேசங்களுக்கு விசை கிடைக்கிறது. உத்தரப் பிரதேசத்துக்கு ரீஹுண்ட் அணைத் திட்டம் உள்ளது. ஒரிஸ்ஸாவின் தேவையை ஹிராகுட் அணை பூர்த்தி செய்கிறது. தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள மூன்று மின்சார நிலையங்களிலிருந்து மேற்கு வங்காளத்துக்கும் பீஹாருக்கும் விசை கிடைக்கிறது. மத்தியப் பிரதேசத்துக்குச் சம்பல் திட்டம் உள்ளது. தென்னிந்திய ராஜ்யங்களுக்குத் துங்கபத்ரா, ஷராவதி, குந்தா, மச்சகுண்டம் என்பன போன்ற பல அணைத் திட்டங்கள் பணிபுரிகின்றன.

மின்சார உற்பத்திக்கெனப் பிரத்தியேக அணைகளும் கட்டப்பட்டுள்ளன. மஹாராஷ்டிரத்தின் கோய்னு அணை இதற்கு உதாரணம். மற்றும், நிலக்கரி அல்லது டீஸல் எண்ணெய்யின் உதவியால் விசை உற்பத்தி செய்யும் நிலையங்களும் நிருமாணிக்கப்பட்டிருக்கின்றன. பொக்காரோ நிலையம் இந்த ரகத்தைச் சேர்ந்தது. மஹாராஷ்டிரம், ராஜஸ்தான், தமிழ் நாடு ராஜ்யங்களில் ஒவ்வொரு அணுசக்தி மின்சார நிலையம் வீதம் நிருமாணிக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. தோரியம், யுரேனியம் என்ற மூலப் பொருட்களை இந்நிலையங்கள் பயன்படுத்தும்—இவ்வாறு, நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் ஏதாவது ஒருவகை மின்சார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.


### மின்சார வினியோகம்

உற்பத்தியாகும் மின்சாரத்தைப் பல்வேறு இடங்களுக்கு வினியோகிப்பதும் பிரம்மாண்டமான பணியாகும். லட்சக்கணக்கான வீடுகளுக்கும், வயல்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் அதை அனுப்ப வேண்டியிருக்கிறது.

கனமான உலோகக் கம்பிகள் மூலம் மின்சாரம் பல இடங்களுக்கும் அனுப்பப்படுகிறது. ரயில் அல்லது பஸ்ஸில் நீங்கள் பிரயாணம்



மின்சாரம் உற்பத்தி செய்யும் மாபெரும் அணைகளுள் ஒன்று பரக்ரா அணை. இங்கிருந்து பஞ்சாப், ராஜஸ்தான், டில்லி பிரதேசங்களுக்கு விசை கிடைக்கிறது.



பன்செட் குன்று அணையில் உள்ள மின்சார நிலையம். மேற்கு வங்காளம், பீஹார் ராஜ்யங்களில் பல பிரதேசங்களுக்கு இங்கிருந்து விசை அனுப்பப்படுகிறது.





மஹாராஷ்டிராவில் சமீபத்தில் மின்சார வசதியைப் பெற்றுள்ள கிராமத்தில் ஒரு தெரு.



தமிழ்நாட்டு கிராமங்களில், மின்சார லைன்களைச் சாதாரணமாகக் காணலாம். அங்கு, ஒவ்வொரு நான்கு கிராமங்களிலும் மூன்றுக்கு விசை வசதி இருக்கிறது.


ஒரு கிராமத்துக்கு மின்சார வசதியைப் புதிதாக விஸ்தரிப்பதில் சிப்பந்திகள் முனைந்திருக்கின்றனர்.





நமது கிராமங்களிலே பாசன பம்பு செட்டுகளை இயக்குவதற்கு
மின்சாரம் கணிசமாக உபயோகிக்கப்படுகிறது.

கிராமாந்தர வீடுகளில் மின்சாரத்தின் உதவியால் பிரகாசமான விளக்குகள்,
மின் விசிறிகள், வானொலிப் பெட்டிகள் முதலிய வசதிகள் புகுந்துள்ளன.



செய்யும்போது கிராமாந்தரப் பகுதிகளில் வரிசை வரிசையாகக் கம்பங்கள் மீது கம்பிகள் செல் வதைக் காணலாம். இந்த மின்சார லைன்களில் பெரும்பாலானவை கடந்த பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளில் போடப்பட்டவையே.

நம்முடைய விசாலமான நாட்டில் பல்வேறு இடங்களுக்கும் மின்சார லைன்கள் போடுவதற்கு ஏராளமான பணம் செலவாகிறது. நமது மக்க ளில் சுமார் 80 சத விகிதத்தினர் கிராமங்களில் வசிக்கின்றனர். பெரும்பாலும் கிராமங்கள் பரவலாகச் சிதறிக் கிடக்கின்றன. மின்சாரம் உற்பத்தியாகும் இடங்களிலிருந்து அவை தொலை தூரங்களில் உள்ளன. புதிதாக ஒரு கிராமத் துக்கு மின்சார இணைப்பு கொடுப்பதற்குச் சராசரி ரூ. 70,000 செலவாகிறது. இதன்படி, ஐந்தரை லட்சம் கிராமங்களுக்கும் மின்சார வசதியை விஸ்தரிப்பதற்கு ரு. 3,000 கோடிக்கு மேல் தேவைப்படும். வேறுபல முக்கியமான அபிவிருத்திப் பணிகளும் இருப்பதால், இந்த ஒரு காரியத்திற்காக மாத்திரம் இவ்வளவு பெருந் தொகையை உடனடியாகச் செலவிட முடியாது. அதனால் கிராமாந்தரப் பகுதிகளுக்குப் படிப்படி யாக மின்சார வசதியைச் சர்க்கார் விஸ்தரித்து வருகின்றனர்.

இந்த விஸ்தரிப்பின் முதல் கட்டம் அதி துரிதமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. ஐயா யிரமும் அதற்கு மேலும் ஜனத்தொகையைக் கொண்ட டவுன்கள், பெரிய கிராமங்கள் ஆகிய வற்றில் அநேகமாக எல்லாவற்றுக்கும் மின்சார வசதி இப்போது இருக்கிறது. 1947-ல் நாலா யிரம் டவுன்களிலும் கிராமங்களிலுமே மின்சார வசதி இருந்தது ; 1966 மார்ச் மாத நிலவரப் படி 54,700 ஆக இவற்றின் எண்ணிக்கை பெருகியிருக்கிறது. அதாவது, மின்சார வசதி பெற்ற டவுன்கள், கிராமங்களின் எண்ணிக்கை இருபது ஆண்டுகளுக்குள் பத்து மடங்கிற்கு மேல் அதிகரித்திருக்கிறது.

நாட்டின் சில பாகங்களில் மின்சார விஸ்தரிப்பில் மிகப் பிரமாதமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் நான்கு கிராமங்களுக்கு மூன்று வீதம் இந்த வசதியைப் பெற்றுள்ளன. பஞ்சாபில் பாதிக்கு மேற்பட்ட கிராமங்களில் மின்சாரம் இருக்கிறது. உத்தரப் பிரதேசம், வேறு சில ராஜ்யங்கள் ஆகியவற்றின் சில பகுதிகளும் இதே போல் மின்சார வசதியைப் பெற்றுள்ளன. யூனியன் பிரதேசங்களாகிய டில்லி, புதுச்சேரி ஆகியவற்றில் அடங்கிய கிராமங்கள் எல்லாம் மின்சார மயமாக்கப்பட்டுள்ளன.

### மின்சாரத்தின் நன்மைகள்

இதே வேகத்தில் கிராமங்களுக்கு மின்சார வசதியை மேலும் மேலும் விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் உறுதி கொண்டிருக்கிறது. இன்னும் இரண்டு ஆண்டுகளில், காந்திஜியின் நூறுவது பிறந்த நாளைக் கொண்டாடும்போது, ஒரு லட்சம் கிராமங்களில் மின்சார வசதி இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது, இரண்டாயிரம் முதல் ஐயாயிரம் வரை ஜனத்தொகையைக் கொண்ட ஊர்களுள் பெரும்பாலானவை இந்த வசதியைப் பெற்றிருக்கும்.

மின்சாரத்தினால் நமது கிராமங்களுக்கு என்னென்ன நன்மைகள் கிடைக்க முடியும்? மின்சாரம் மிக மலிவான விலையில் உழைப்புச் சக்தியைத் தருகிறது என்பது மிக முக்கியமான விஷயம். ஒரு மனிதன் பத்து மணி நேரத்தில் செய்யக்கூடிய வேலையை ஒரு கிலோவாட் மின்சாரம் செய்துவிடும். தொழில்களுக்கு வேண்டிய விசைக்காக ஒரு யூனிட்டுக்கு நான்கு முதல் பத்துப் பைசா வரைதான் செலவாகிறது. வீட்டு உபயோகத்திற்கான மின்சாரத்திற்கு இதைவிடச் சற்று அதிகமான கட்டணம் விதிக்கப்படுகிறது. சாதாரணமாக நாம் செய்யக்கூடியதைவிட அதிகமான வேலையை, குறைந்த நேரத்தில், சொற்பச் செலவில் மின்சாரத்தின் உதவியால் செய்ய முடியும்

கிராமங்களில் மின்சாரத்தினால் ஒளி தோன்றியிருக்கிறது. கிராம வாழ்க்கையில் விறுவிறுப்பு

ஏற்பட்டிருக்கிறது. வேலை செய்யவும், படிக்கவும், ஊர்க்காரர்கள் கூடிப் பேசுவதற்கும் முன்னை விட அவகாசம் கிடைக்கிறது. தெருவில் பிரகாசமான விளக்குகள் எரிவதால் திருட்டுப் பயம் குறைந்து சந்தோஷமாக வாழ முடிகிறது.

நிலங்களைப் பாசனம் செய்வதற்கு மின்சாரம் உதவுகிறது என்பது இவை எல்லாவற்றையும் விட முக்கியமானது. பாசனப் பம்பு செட்டுகளை இயக்குவதற்காகவே நமது கிராமங்களில் மின்சாரம் முக்கியமாகப் பயன்படுத்தப்படுகிறது. இதுவரை ஏற்றம், கபிலை போன்ற சாதனங்கள் மூலம் கிணற்று நீரைக் கிராமவாசிகள் இறைத்து வந்தனர் ; சில பகுதிகளில் டீஸல் எண்ணெய்யால் இயங்கும் பம்புகளும் உபயோகிக்கப்பட்டன. இப்போது மின்சாரப் பம்புகள் மேலும் மேலும் அதிகமாக உபயோகிக்கப்படுகின்றன. கடந்த பத்து ஆண்டுகளில் தமிழ் நாட்டில் மாத்திரம் ஐந்து லட்சம் பம்புசெட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. மற்ற ராஜ்யங்களிலும் பம்புகளின் எண்ணிக்கை பெருகி வருகிறது. சிரமமில்லாமல், குறைந்த செலவில், மிகுதியான தண்ணீரை இறைப்பதற்கு உதவும் மின்சாரப் பம்பை ஒரு வரப் பிரசாதமாக நமது கிராமவாசிகள் மதிக்கிறார்கள். இந்தச் சாதனத்தின் உதவியால் அவர்கள் மகசூலைப் பெருக்கி அதிக வருமானம் பெறமுடிகிறது.

சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள் ஆகியவற்றுக்கும் மின்சாரத்தினால் நன்மை ஏற்படுகிறது. சிறிய டவுன்களிலும் கிராமங்களிலும் இந்தத் தொழில்கள் பரவலாக நடத்தப்படுகின்றன. சமீப காலம் வரை தேக உழைப்பினாலும், நிலக்கரி அல்லது டீஸல் எண்ணெய்யை உபயோகித்தும் இத்தொழில்கள் இயக்கப்பட்டன. இதில் செலவு அதிகம். இந்தத் தொழில்களில் மின்சார விசையை உபயோகிப்பதால் குறைந்த செலவில் அதிகமான பண்டங்களை உற்பத்தி செய்ய முடிகிறது. நூல் நூற்றல், துணி நெய்தல், கருப்பஞ்சாறு பிழிதல், எண்ணெய் ஆட்டுதல், மரம் அறுத்தல் முதலிய தொழில்களில் இப்போது மின்சாரம் உபயோகிக்கப்

படுவதால் அதிகமான லாபம் கிடைக்கிறது. பழங்கள், காய்கறிகளை டப்பாக்களில் அடைத்துப் பக்குவப்படுத்துதல் போன்ற புதிய தொழில்களும் கிராமாந்தரப் பிரதேசங்களில் ஏற்பட்டு வருகின்றன; அதனால் புதிதாகப் பலருக்குப் பிழைப்புக் கிடைக்கிறது.

## புதிய மனப்பான்மை

மின்சாரத்தின் வருகையால் கிராமங்களில் தொழில் நுட்ப மனப்பான்மையும் வளர்கிறது. மின்சார விசிறிகள், வானொலிப் பெட்டிகள். பம்புகள், விசைத் தறிகள் முதலிய இயந்திர சாதனங்கள் கிராமாந்தர வாழ்க்கையில் புகுந்துள்ளன. இயந்திரக் கலையில் நாட்டம் கொண்ட இளைஞர்கள் அதைக் கற்பதற்கும், அதையே பிழைப்பாகக் கொள்வதற்கும் புதிய வாய்ப்புகள் ஏற்படுகின்றன. புதிய துறைகளில் கிராமவாசிகள் தேர்ச்சி பெறுகின்றனர். நவீன இயந்திர யுகத்தில் கிராமம் பிரவேசிக்கிறது.

மொத்தத்தில், மின்சார வசதி காரணமாக கிராம வாழ்க்கையில் அதிகச் சௌகரியமும் உற்சாகமும் ஏற்படுகின்றன. கிராமத்திற்கும் நகரத்திற்கும் இடையேயுள்ள வித்தியாசம் குறைகிறது. கிராமவாசிகள் பிழைப்புக்காகவோ, நவீன வசதிகளுக்காகவோ நகரங்களில் குடியேறும் வழக்கம் இதுவரை இருந்து வந்திருக்கிறது. மின்சாரத்தின் உதவியால் கிராம வாழ்க்கை வளம் பெறும்போது அவர்கள் இவ்வாறு வெளியேற வேண்டியிருக்காது. அதோடு, முன்பு கிராமங்களுக்குச் செல்லத் தயங்கிக் கொண்டிருந்த டாக்டர்கள், என்ஜினீயர்கள், உபாத்தியாயர்கள் முதலியோர் இனிமேல் அங்கு விருப்பத்துடன் சென்று குடியேறுவர்.

மின்சாரத்தின் வாயிலாக நம்முடைய கிராமங்களுக்கு இன்னும் பல நன்மைகள் ஏற்பட முடியும். ஏற்கனவே சில மாறுதல்கள் கண்கூடாகத் தெரிகின்றன. காலப்போக்கில் இன்னும் பல மாறுதல்கள் ஏற்படும். பின்னர் கிராமங்களில் புது வாழ்வு பூரணமாக மலரும்.

22842

## சில புள்ளி விவரங்கள்

* பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தின் கடைசி 50 ஆண்டுகளில் நம் நாட்டில் உற்பத்தியான மொத்த மின்சார விசை இப்போது ஒரு வருஷத்தில் உற்பத்தியாகிறது.

* 1947-ல் 14 லட்சம் கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு நம் நாட்டில் வசதி இருந்தது ; இப்பொழுது அது 101 லட்சம் கிலோவாட்டாக அதிகரித்திருக்கிறது.

* 1951-ல் நம் நாட்டில் நபர்வாரியாகச் சராசரி உபயோகிக்கப் பட்ட மின்சாரம் 13 கிலோவாட்-மணி ; இப்பொழுது அது 50 கிலோவாட்-மணியாக உயர்ந்திருக்கிறது.

* இந்தியாவில் 563,238 டவுன்களும் கிராமங்களும் உள்ளன. 1947-ல் இவற்றுள் 4,000 ஊர்களுக்கே மின்சார வசதி இருந்தது ; இப்போது 54,700 ஊர்களுக்கு இவ்வசதி இருக்கிறது. 5,000-க்கு மேல் ஜனத்தொகையைக் கொண்ட எல்லா டவுன்களுக்கும் கிராமங்களுக்கும் மின்சார வசதி விஸ்தரிக் கப்பட்டிருக்கிறது.

ஜூலை 1966 (ஆஷாட 1888)

Electricity for Our Villages (Tamil)

விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

Published by the Director, Publications Division, Ministry of Information and Broadcasting, Delhi-6 and printed by the Director of Stationery, and Printing Government of Madras